திருவாரூர்மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை
(05.09.2018 முதல் 09.09.2018 வரை)
தமிழ்நாடுநெல் ஆராய்ச்சிநிலையம், ஆடுதுறை– 612 101
போன்: 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in Fax: 0435 2472881


==========================================================================

தேதி: 04.09.2018

**கடந்த 4 நாட்களில் நிலவிய வானிலை (31.08.2018 - 03.09.2018)**

| காரணிகள் | கடந்தநாட்களில் வானிலை |
|---|---|
| மழை (மி.மீ.) | 21.7 |
| அதிகபட்சவெப்பநிலை(°C) | 35-38 |
| குறைந்தபட்சவெப்பநிலை(°C) | 26-28 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 4 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 56-80 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 4-5 |

**அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலைமுன்னறிவிப்பு**

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>05.09.2018 | நாள் 2<br>06.09.2018 | நாள் 3<br>07.09.2018 | நாள் 4<br>08.09.2018 | நாள் 5<br>09.09.2018 |
| மழை (மி.மீ.) | 1 | 0.5 | 0 | 0 | 0 |
| அதிகபட்சவெப்பநிலை(°C) | 37 | 37 | 38 | 37 | 37 |
| குறைந்தபட்சவெப்பநிலை(°C) | 28 | 28 | 28 | 28 | 28 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 5 | 6 | 6 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 40-75 | 40-75 | 35-75 | 35-75 | 35-75 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8 | 8 | 10 | 10 | 10 |
| காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

05.09.2018 முதல் 09.09.2018 வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 05.09.18 மற்றும் 06.09.2018 அன்று எதிர்பார்க்கப்படும் மழையளவ 0.5-1 மி.மீ.

**வேளாண் அறிவுரைகள் :**
**பயிர் : நெல்**
**பருவம்: நெல் - குறுவை : முதிர்ச்சி பருவம் / சம்பா : விதைப்பு மற்றும் நடவு பருவம்**

- குறுவை நெற்பயிரில் கருநாவாய் பூச்சியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு அசிபேட் 400 கிராம் என்ற மருந்தினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து காலை அல்லது மாலை வேளையில் கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவும்.

- சம்பா வயல்களில் நேரடிவிதைப்பு செய்யும் பொழுது டிராக்டர் மூலம் விதைக்கும் கருவிக்கு ஏக்கருக்கு 15 கிலோ மற்றும் ஆட்கள் கொண்டு தெளிக்கும் பொழுது ஏக்கருக்கு 30 கிலோ விதை அளவும் பரிந்துரைக்கப்படுகிறது. விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.

- நேரடி விதைப்பு செய்த சேற்று வயல்களில் பயிர் முளைத்த 3-4 தினங்களுக்குள் களை முளைக்கும் முன் களைக்கொல்லியான பிரிடிலாக்குளோர் + சேப்னர் ஏக்கருக்கு 500 மி.லி. என்ற அளவில் தெளித்துக் களைகளைக் கட்டுப்படுத்தவும்.

- சம்பா நடவு செய்யும் விவசாயிகள் 1 ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம், 10 கிலோ ஜிங்சல்பேட், 35 கிலோ யூரியா, 150 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 10 கிலோ பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இடவேண்டும். சம்பா நடவிற்கு முன் ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டு பூச்சி மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.

இயக்குநர்